28.01.2026 Mcop 32/2021 எ.ம.சா 1 முத்துக்குமார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு **2ம் எதிர்மனுதாரர் தரப்பில்** குறுக்குவிசாரணை

எங்களது காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்த வாகனத்தின் ஒட்டுனர் தான் சேர்மராஜா என்றால் சரிதான். அந்த சேர்மராஜா மீது தான் முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சேர்மராஜா வேறு எந்த மேல்நடவடிக்கை எடுத்ததாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. விபத்திற்கு காரணம் மனுதாரர் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடு தொகையும் வழங்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

எங்களது நிர்வாகம் நியமித்த களப்பணியாளர் அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். களப்பணியாளர் அறிக்கையில் இருந்து குற்ற வழக்கு ஆவணங்களிலும் மனுதாரர் ஒட்டி சென்ற வாகனத்திற்கு முன்னால் hundai வாகனம் சென்றது என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் அகலமான தேசியநெடுஞ்சாலை என்றால் சரிதான். மனுதாரர் ஒட்டி சென்ற வாகனத்திற்கு பின்புறம் தமிழ்நாடு அரசு பேரூந்து வந்தது என்றால் சரிதான். மனுதாரர் ஒட்டி சென்ற வாகனத்திற்கும், தமிழ்நாடு அரசு பேரூந்துக்கும் முன்பக்கம் சேதாரங்கள் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனுதாரர் ஒட்டி சென்ற வாகனத்திற்கும், தமிழ்நாடு அரசு பேரூந்துக்கும் முன்பக்கம் தான் சேதாரம் இருந்தது என்றும், அதனை நான் மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனுதாருக்கு ஏற்பட்ட காயம்

கொடுங்காயம் என்பதால் அரசு மருத்துவமனைக்கு உடனடியாக கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்றால் முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. மனுதாரர் ஒட்டி சென்ற வாகனத்திற்கு பின்னால் பேருந்து அதிவேகமாக வந்து மோதியதால் மனுதாரர் முன்னால் சென்ற வாகனத்தின் மீது மோத வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த hundai வாகனம் எவ்வித சிக்னலும் இல்லாமல் வலதுபுறம் திரும்பியதால் விபத்து ஏற்பட அதுவும் ஒரு காரணம் என்றால் சரியல்ல. மனுதாரர் காப்பீடு செய்த காப்பீடானது பேக்கேஜ் பாலிசியாகும். அந்த காப்பீட்டின் படி Paid Driver, own damage, 3rd party ஆகியவை உள்ளது என்றால் சரிதான். இந்த காப்பீடானது யார் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சண்முகதேவர் டிரஸ்ட் பெயரில் பெறப்பட்டுள்ளது. இந்நீதிமன்றத்தில் சாட்சிகளின் சாட்சியம் பற்றி எனக்கு தெரியும். பொதுவாக ஆவணங்களுக்கு மாறாக சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரிதான். மனுதாரர் ஒட்டிசென்ற வாகனம் முறையாக எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாருக்கு செல்லுபடியாக கூடிய ஒட்டுனர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். மனுதாருக்கு விபத்து எப்படி ஏற்பட்டது என விளக்கம் கோரி கடிதம் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த கடிதத்திற்கு மனுதாரர் விபத்து நடந்த விதம் குறித்தும் , முறையான ஆவணங்களையும் ஆஜர் செய்து அவரது விளக்கத்தை சமர்ப்பித்திருந்தார் என்றால் சரிதான். அந்த ஆவணங்களின் அடிப்படையிலும், குற்ற வழக்கு ஆவணங்களின் அடிப்படையிலும் மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் இல்லை என தெரியவந்தது என்றால் சரியல்ல. மனுதாரரே சொல்லியுள்ளார். மனுதாரர் கூறியதாக கூறும் கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். இந்த விபத்தில் மனுதாரரர் உரிமையாளராக இல்லாத நிலையில் வாகனத்தை ஓட்டி சென்றதால் காப்பீட்டின் அடிப்படையில் எங்களது நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரின் குறுக்குவிசாரணையில் தான் தான் உரிமையாளர் என ஒப்புக்கொண்டுள்ளார். காப்பீடு செய்யும் போது முன்மொழி கடிதம் வாங்கி கொண்டு தான் காப்பீடு செய்யப்படும் என்றால் சரிதான். புளியங்குடியை சேர்ந்த டிரஸ்டி சமுக சேவை சங்கம் முன்மொழி கடிதத்தை கொடுத்தார்கள் என்றால் சரிதான். மனுதாருக்கு எங்களது நிறுவனம் இதுவரை இழப்பீடு கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் எதிரூரையில் கூறாத சங்கதிகளை முதல்விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளதால் எனது சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் ஆவணங்களுக்கு மாறாக சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. மனுதாரர் எங்களது காப்பீட்டை பொறுத்த வரை 3ம்நபர் என்பதால் எங்களது நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல.

(ஒம்) எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.